தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 23 | செப்டம்பர் 2023 | கனி 10



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16


ஆசிரியர்
B. அர்ஜுனன்

MONTHLY
THE WORD OF CHRIST

# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39





பாடம் : 45
தலைப்பு : மகதலேனா மரியாள் – Mary Magdalene
வேத வாசிப்பு : யோவான் 20:11-18

1. ஏழு பிசாசு நீங்கினவள் - லூக்.8:2
2. இயேசுவின் கல்லறைக்கு எதிரே உட்கார்ந்தவர்களில் ஒருவர் - மத்.27:61
3. அப்போஸ்தலருக்கு இயேசுவின் உயிர்த்தெழுதலை அறிவித்தவர்களில் ஒருவர் - லூக்.24:10


மாத இதழுக்கான சந்தா செலுத்த மூன்று வழிகள்

GPAY & PhonePe - 9443558041



India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu

Contact Us: 6379350509


## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

Our TV Program: All Days of the Week

*Every Sunday,Thursday & Saturday 6.00 P.M on Heaven TV*

*Every Monday, Tuesday & Wednesday 6.00 P.M on Joy TV*

*Every Sunday, Friday & Saturday 8.30 P.M on Nithyam TV*

YouTube : the word of christ





**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை.
செய்திகள்: ஜெ.சி.சோட். பெட்டி சோட்.
மற்றும்
வேதபாடம். வாலிபர் பகுதி. பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி. வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 23 செப்டம்பர் – 2023 கனி – 10


ஆசிரியருரை



## உனக்காக வேண்டிக்கொண்டேன்
## I Have Prayed for You

நமக்காக யாராவது பரிந்துபேசமாட்டார்களா என்று ஏங்கிக்கொண்டிருக்கும் அநேகரைக் குறித்து நாம் கேள்விப்படுகிறோம். உங்களையும் என்னையும் மீட்கும்படியாகவும், நமக்காக பரலோக பிதாவை நோக்கி வேண்டிக்கொள்ளும்படியாகவும் ஆண்டவராகிய இயேசு இவ்வுலகிற்கு கடந்துவந்தார். அவர் அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய பேதுருவை நோக்கி சொல்லும்போது; " பின்னும் கர்த்தர்; சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்"(லூக்.22:31,32). நம்மில் விசுவாசத்தை துவக்குகிறவரும் அதை முடிக்கிறவரும் ஆண்டவர் இயேசுவே. அவரில் நாம் கொண்டுள்ள விசுவாசம் காக்கப்பட நமக்காக வேண்டிக்கொள்ளுகிற ஆண்டவராயிருக்கிறார். சிலவேளைகளில் நாம் விசுவாசத்தில் குறைந்துவிடுகிறோம். கர்த்தர் நம்மிடம் எதிர்பார்ப்பது கடுகளவு விசுவாசம். இந்த கடுகளவு விசுவாசத்தை நாம் விட்டுவிடாதிருக்கவேண்டும். ஏனென்றால் குணமாக்கப்பட்ட அநேகரிடம் கர்த்தர் கேட்ட கேள்வி நீ விசுவாசிக்கிறாயா என்று கேட்டார். நமக்கு விசுவாசம் மிகவும் அவசியமான ஒன்றாயிருக்கிறது. அந்த விசுவாசம் வளரும்போது தேவனுடைய மகிமையான காரியங்களை நாம் காணமுடியும். இந்த விசுவாசத்தை ஒழித்துப்போடவும் அதை குழைத்துபோடவும் பிசாசு முயற்சிப்பான். ஆகையால் அந்த விசுவாசம் நம்மில் ஒழிந்துபோகாதிருக்க நமக்காகவேண்டுதல் செய்கிறார். நாம் ஒருவரையொருவர் விசுவாச விஷயத்தில் உற்சாகப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம்.

யோபுவை பிசாசு சோதிக்கும்போது; அவனில் இருக்கும் விசுவாசத்தை எடுத்துப்போடும்படியாக வகைதேடினான். "சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக; தோலுக்குப் பதிலாகத் தோலையும், தன் ஜீவனுக்குப் பதிலாகத் தனக்கு உண்டான எல்லாவற்றையும், மனுஷன் கொடுத்துவிடுவான். ஆனாலும் நீர் உம்முடைய கையை நீட்டி, அவன் எலும்பையும் அவன் மாம்சத்தையும் தொடுவீரானால்; அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோபாரும் என்றான்" (யோபு 2:4,5). பிசாசினால் யோபு மிகவும் வாதிக்கப்பட்டார். அவருடைய தோல் முதலானவைகள் அழுகி நாற்றம் எடுக்கும் அளவுக்கு கொடிய பருக்களால்

யோபுவை வாதித்தான். யோபு தன்னுடைய வாயை திறந்து தேவனை தூஷிக்கவேண்டும் என்பதுவே பிசாசின் நோக்கமாயிருந்தது. ஆனால் கர்த்தர் யோபுவை அறிவார். அவனுடைய சோதனைக்காலங்கள் முடிந்தவுடன் கர்த்தர் அவனை இருமடங்காக ஆசீர்வதித்தார். சங்கீதக்காரன் சொல்லும்போது; " தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார். அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக்கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்" என்ற சங்.145:18,19 வசனத்தின்படி யோபுவை கர்த்தர் இரட்சித்தார். நீங்கள் உங்களுக்கு வரக்கூடிய சோதனை, வேதனைகளிலிருந்து கர்த்தரை நோக்கி கூப்பிடுகிறீர்களா? அல்லது தேவனை தூஷிக்கிறீர்களா? நாம் கர்த்தரை பற்றிக்கொண்டிருப்பதில் உண்மை காணப்படவேண்டும். அநேகர் கர்த்தரைப் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் உண்மையில்லை. நாம் பற்றிக்கொண்டிருக்கும் கர்த்தர் சத்தியபரர். அவர் ஒரு மனிதனைப்போல பொய்பேசுகிறவர் அல்ல. உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

மேலும், கர்த்தர் தமது மூலமாய் சேருகிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறார். இன்றைக்கு மனிதர்களை நம்பி அநேகர் சபைக்கு செல்லுகிறார்கள். ஊழியக்காரர்களை நம்பி சபையில் சேருகிறார்கள் அல்லது உறவினர்களை நம்பி சபையில் சேருகிறார்கள். வேதம் இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சபையிலே அநுதினமும் சேர்த்துக்கெண்டுவந்தார் என்று அப்.2:47. மேலும், "தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபி.7:25) என்று சொல்லுகிறது. இன்றைக்கு மனிதன் இரட்சிக்கப்பட ஒரே ஒரு வழி மட்டுமே உள்ளது அது இயேசுகிறிஸ்துவானவர் ஏற்படுத்தின வழி. அந்த வழி ஜீவ வழியாக இருக்கிறது. இவ்வழியே செல்ல அவரில்லாமல் செல்ல முடியாது என்பதுவே உண்மை. ஆகையால் என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார். ஆகையால் அவர் மூலமாக செல்ல முற்படுங்கள்.

மனிதன் ஒவ்வொருநாளும் தான் செய்துவருகிற தவறை திரும்ப திரும்ப செய்கிறான். எந்த ஒரு மனிதனும் அல்லது மனுஷியும் உங்களை இரட்சிக்கமுடியாது. பிதாவாகிய தேவன் உலகத்திலே மனிதனை இரட்சிக்கும்படியாக தெரிந்துகொள்ளப்பட்டவர் ஆண்டவராகிய இயேசு ஒருவரே. இவரே பிதாவின் சித்தத்தை பூரணமாக நிறைவேற்றியவர். இவர் வானத்திலிருந்து வந்த கர்த்தர். பரிசுத்தர், உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும்படியாக தேவன் தெரிந்துகொண்ட தேவஆட்டுக்குட்டி என்றெல்லாம் நாம் வேதத்தில் வாசிக்கிறோம். எனவே இவர் தமது மூலமாய் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யக்கூடியவராகவும், உயிரோடிருக்கிறவராகவும் இருக்கிறார். இயேசுவைப் பெற்றெடுத்த மரியாள் மரித்துவிட்டாள். ஆனால் அவள் உயிர் பெறவில்லை. இயேசுவானவர் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். பிதாவாகிய தேவன் அவரை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தார். அவர் உயிரோடிருந்து நமக்காக வேண்டுதல் செய்யக்கூடிய பிரதான ஆசாரியராயிருக்கிறார். மேலும் கர்த்தர்

சொல்லுகிறார்; "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்கிறார் (யோவா.17:20). இவ்வசனத்தின்படி உலகம் இருக்கும்வரை ஆண்டவருடைய வசனத்தை கேட்டு விசுவாசிக்கிற யாவருக்காகவும் அவர் பிதாவை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறவராயிருக்கிறார். இப்படி நமக்காக பிதாவிடம் பரிந்துபேசும் ஆண்டவர் ஒருவர் உயிரோடிருக்கும்போது உங்களுடைய கவலைகளையெல்லாம் அவர்மீது வைத்துவிடுங்கள். கர்த்தர் உங்களை பாதுகாத்துக்கொள்ளுவார். நீங்கள் இயேசுவோடு நெருங்கி சேர ஒரு வழி இருக்கிறது. அது அவருடைய இரத்தம். இதைக்குறித்து பவுல் சொல்லும்போது; "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" (எபே.2:13) என்கிறான். இயேசுவின் இரத்தத்தை விசுவாசிக்காத ஒருவர் அவருடைய சமுகத்திற்கு நெருங்கிசேரமுடியாது. இன்றைக்கு பெயர் அளவில் அநேக கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய நிலைமை என்ன? அவர்கள் பாரம்பரியமாக கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருக்கிறார்கள் ஆனால் அவர்களுக்கு கிறிஸ்துவைப்பற்றியும் அவருடைய அன்பைப்பற்றியும் ஒன்றும் தெரியாது. அவர் தங்களுடைய குடும்பத்தின் கடவுள் என்றே சொல்லுவார்கள். இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்திற்கு சமீபமாகவரவில்லை, மிகவும் தூரமாக இருக்கிறார்கள்.

இயேசுவானவர் இப்பொழுது எங்கே இருக்கிறார் என்ற கேள்வி எழும்புமென்றால்; அவர் "....பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்" (எபி.9:24). இந்த வசனத்தில் நமக்காக என்ற ஒரு வார்த்தையை நாம் வாசிக்கிறோம். நமக்காக வேண்டிக்கொள்ளும்படியாக தேவனுடைய சமுகத்தில் பிரவேசித்திருக்கிறார். பூமியிலே நம்முடைய பாவங்களை போக்கும்படியாக தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தினார். மேலும், நாம் பாவத்தின்பிடியில், அதாவது பாவத்தின் வஞ்சனையில் சிக்கிக்கொள்ளாதிருக்கவும், மீண்டும் பாவத்தில் வீழ்ந்துபோகக்கூடியவர்களுக்காகவும் பிதாவிடம் பரிந்துபேசுகிறவராயும் இருக்கிறார். எனவே "அவர் பரலோகத்திற்குப்போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்" என பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது.3:22).

அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடும்போது; "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1யோவா.2:1). பாவத்திலிருந்து மீட்டு எடுக்கப்பட்ட ஒருவன் மீண்டும் பாவஞ்செய்யாதபடி தன்னைக்காத்துக் கொள்ளவேண்டும். ஒருவேளை எதிர்பாராதவிதமாகவோ அல்லது பிசாசினால் வாஞ்சிக்கப்பட்டோ அவன் பாவஞ்செய்வானானால் அப்படிப்பட்ட மனிதனுக்காக அவர் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். ஒரு முறை மாயவித்தைக்காரனாகிய சீமோன் என்பவன் அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதை கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து நான் எவன்மேல் என் கைகளைவைக்கிறேனோ,

அவன் பரிசுத்தஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான். இது சீமோன் செய்த மாபெரும் பாவமாக இருந்தது. ஆகையால் பேதுரு அவனை நோக்கி; தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப்போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் என்றான். இப்படி அநேகர் சத்தியத்தை அறிந்த பின்பும் பாவம் செய்யக்கூடும். அவர்களுக்கு ஒருவேளை அவர்களுடைய பாவம் மன்னிக்கப்படலாம். அவர்கள் அறியாது செய்திருக்கலாம். இதற்காக இயேசுவானவர் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருந்து நமக்காக பரிந்துபேசுகிறார். அவர் அப்படியே பரிந்துபேசிக்கொண்டே இருப்பார் நாம் பாவம் செய்துகொண்டே இருக்கலாம் என்று அர்த்தமல்ல. பாவத்திற்கு விலகி நாம் நீதியை செய்யத்தக்கதாக கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம். ஆகையால் நம்முடைய பரிசுத்தத்தை பரிசுத்தஆவியானவரின் உதவியோடு பாதுகாத்துக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

**இயேசுவானவர் சர்வலோகத்தின் பாவத்தையும் நிவர்த்திசெய்கிற பலியாயிருக்கிறாரா?**

ஆம், அவர் "நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்" என அப்போஸ்தலனாகிய யோவான் 1யோவா.2:2-ல் குறிப்பிட்டுள்ளான். இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டி என இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான் இயேசுவைப் பார்த்து சொன்னான். ஆம், அவர் சர்வலோகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிறதேவ ஆட்டுக்குட்டியாக வந்தார். அந்தப்படியாக உலகத்தாருடைய பாவத்தை சிலுவையில் சுமந்துதீர்த்தார். அவரை விசுவாசிக்கிற நீங்கள் அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெறுவீர்கள். பலவிதமான பலிகளை செலுத்திவந்த காலங்கள் கடந்து இப்பொழுது ஒரே பலியாக இயேசுவை தேவன் பாவத்திற்காக ஒப்புக்கொடுத்தார். அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே பாவத்தை சிலுவையில் கொன்று வெற்றிசிறந்தார். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசித்தால் உங்களுடைய ஆத்துமா பாவத்திலிருந்து காக்கப்படும். இயேசுவின் இரத்தத்தினாலே பாவமறகழுவப்படுவீர்கள். இன்றே உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். அவரை விசுவாசித்து பற்றிக்கொள்ளுங்கள். அவர் உங்களுக்காக பரிந்துபேசுகிற பிரதான ஆசாரியராயும், சதா காலமும் உயிரோடிருக்கிறவராயும் இருக்கிறார். அவரை பிதாவாகிய தேவன் தெரிந்துகொண்டார். அவர்மூலமாக பிதாவிடம் சேரும் சிலாக்கியத்தையும் நீங்கள் பெறுவீர்கள். நீங்களும், உங்களுடைய குடும்பமும் இரட்சிக்கப்பட கர்த்தருடைய வசனத்திற்குச் செவிகொடுங்கள், ஒரு முறை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய் போராடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



# நாம் ஏன் ஆராதனையில் வாய்மொழி பாடலை மட்டும் கட்டாயப்படுத்துகிறோம்

## Why We Have Vocal Music Only In Worship

-J.C.Choate

கிறிஸ்துவின் சபையாராகிய நாம் மற்ற அநேக சமயக் குழுக்களிலிருந்து வேறுபட்டிருக்கின்றோம், ஏனென்றால் நம்முடைய ஆராதனையில் நாம் வாயினால் பாடுகின்றதை மட்டுமே ஏற்றுக்கொள்கிறோம். ஆனபடியினால், நாம் நம்முடைய பாட்டினை இசைக் கருவிகளோடு இணைக்கிறதில்லை. இது வித்தியாசப்படுத்துவதற்காக செய்வதில்லை என நான் தாமதமின்றிச் சொல்லுவேன். மாறாக, வேதாகமம் இவ்வாறு போதிக்கின்றபடியால், நம்முடைய ஆராதனை வேளைகளில் வாயினால் பாடுகின்றதையே ஏற்றுக்கொள்கிறோம்.

இரண்டு விதமான இசை உண்டு. ஒன்று வாய்மொழியில் பாடுவது இன்னொன்று இசைக்கருவியினால் பாடுவது. வாய்மொழி சங்கீதமானது பாடுகின்ற, இனிமையான ஒலியெழுப்புகின்ற இணக்கமான மனிதக் குரல்களாக, மேலும் உலகத்தில் மிக அழகான சங்கீதமாக வெளிப்படுகின்ற ஒன்றாகும். இந்தவிதமான சங்கீதம் தேவனுடைய படைப்பிலிருந்து வருகிறது. இது ஆத்துமாவிலிருந்து வருகிறது மேலும் நம்முடைய சிருஷ்டிகரராகிய தேவனுக்கு துதியாகச் செலுத்தப்படுகிறது. இது முழுவதும் ஆவியாயும், ஜீவனாயுமிருக்கிறது. இசைக்கருவியின் இசை மனிதனால் உருவாக்கப்பட்ட இசைக்கருவியிலிருந்து வருகிறது. இவ்வகையான கருவிகள் ஜீவனற்றது. அவைகள் ஆத்துமா அல்லது ஆவியைக் கொண்டிருக்கவில்லை. அக்கருவிகளின் மேல் மனிதன் அடிப்பதினாலும், அவைகளை இழுப்பதினாலும் அல்லது அவைகளை மீட்டுவதினாலுமே அவைகள் ஒலிகளை எழுப்புகின்றதாயிருக்கிறது. இப்போது இதன் வினாவானது; தேவன் தம்முடைய சிருஷ்டிகள் தம்மை துதிக்கும்படி விரும்புகிறாரா அல்லது மனிதனுடைய படைப்புகள் தம்மை துதிக்கும்படி விரும்புகிறாரா? எது அவருக்கு மிகவும் கருத்துள்ளதாயிருக்கும்? எபிரெய எழுத்தர், ‘‘ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்’’ (எபி.13:15) என்கிறார். நாம் நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர் சொல்லுவதை தயவு செய்து கவனியுங்கள். அது நம்முடைய கனியாக இருக்கும். நம்முடைய பேச்சு, நம்முடைய பாட்டு, நம்முடைய ஜெபங்கள், நம்முடைய துதியின் வார்த்தைகள் போன்றவைகளே நம்முடைய உதடுகளின் கனியாக இருக்கும். யாருக்கு இது செலுத்தப்பட வேண்டும்? நிச்சயமாக, தேவனுக்கே.

நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்கின்றதின் நோக்கத்தைத் தொடர்ந்து பார்க்கையில், பவுல், ‘‘சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக்கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து’’ (எபே.5:19,20) என்று சொல்லுகிறார். ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு அல்லது பாடிக்கொண்டு, அதாவது பாடல்களின் பல்வேறு வகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பாடிக்கொண்டு என்று சொல்லுவதை தயவுசெய்து கூர்ந்து கவனியுங்கள். அத்தோடுகூட அவைகள்

ஆவிக்குரியதாகவும் வேதவசனங்களுக்கேற்றபடியாகவும் இருக்கவேண்டுமென அவர் வலியுறுத்துகிறார். கடைசியாக, அவர் இந்த சங்கீதங்கள் இருதயத்தில் பக்தியுடன் பாடப்படவேண்டும், வாத்தியக்கருவிகளினால் அல்ல என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். இப்போது கிறிஸ்தவர்கள் பாடிக்கொண்டே இருந்தால் மட்டும், அவர்கள் தேவனை ஆராதிக்கமுடியுமா? ஒருவேளை நீங்கள் ஆம் என்று கூறலாம். ஆனால் வாத்தியக்கருவியோடு பாடுவதுபற்றி என்ன சொல்லலாம்? வேதவசனங்கள் அது பற்றி போதித்தால் அது நன்றாக இருக்கும், ஆனால் வேதவசனங்கள் எங்கே அவ்வாறு போதிக்கிறது? அவ்வாறு வசனங்கள் போதிக்கவில்லையென்றால், நம்முடைய சங்கீதத்திற்கு வாத்தியகருவியின் இசையைக்கூட்டினால், அப்புறம் நாம் கர்த்தருடைய சித்தம் செய்கின்றவர்களாயிருப்போமா?

மீண்டும் பவுல், ‘‘கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப்பக்தியுடன் பாடி’’ (கொலோ.3:16) என்கிறான். இங்கே பவுல் என்ன சொல்கிறான்? ஆவிக்குரிய மற்றும் ஞானப்பாட்டுகளினாலும் வார்த்தையினாலும் போதித்து புத்திசொல்லிக் கொண்டு கர்த்தரைத் துதித்துப்பாடுவதின் மூலம் கிரியை நடப்பியுங்கள் என்று **கிறிஸ்துவின் வசனத்தை** வலியுறுத்திச் சொல்கிறான். அதுவே உண்மையாயிருக்கின்றது, பவுலுடைய கூற்றில் வாத்தியகருவி இசையை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதாக காண்கிறீர்களா? இல்லையென்றால், ஆராதனையில் தேவனை ஸ்தோத்தரித்துப்பாட வாத்தியக்கருவி இசையை இணைக்கும்படி தொடர்வீர்களானால் நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு கூட்டிக் கொண்டவர்களாயிருக்கமாட்டீர்களா?

ஆனால் இதனால் ஒன்றும் தவறில்லையென நீங்கள் விவாதிக்கலாம். பிறகு யாரும் எந்தகாரியத்திலும், வேறொன்றிலும் இதில் தவறொன்றையும் காணவில்லை எனத் தொடர்ந்து கூறலாம். முக்கிய குறிப்பானது, நாம் தேவனுடைய வார்த்தையின் போதனையில் கண்டிப்பாக உறுதியாயிருக்க வேண்டும். நாம் அவ்வாறு இல்லையென்றால், பிறகு ஏன் எப்படியாகிலும் இது குறித்து கலங்குகிறீர்கள்?

இது எனக்குப்பிடிக்கிறது அல்லது வாத்தியக்கருவியை மீட்டும் தாலந்தையும் திறமையையும் பெற்றிருக்கிறவர்கள் பற்றிய காரியமென்ன? என்றும் நீங்கள் வாக்குவாதத்துடன் திரும்பவும் வரலாம். அவர்கள் வாத்தியக்கருவிகள் மூலம் சங்கீதம் பாடிக் கர்த்தரை ஸ்தோத்தரித்தால், தேவன் அதனால் மகிமைப் படுத்தப்படமாட்டாரா? மீண்டும் நான் என்ன விரும்புகிறேனோ அதுபற்றிக் கவலை இல்லை, ஆனால் இது தேவன் என்ன விரும்புகிறாரோ அது பற்றியதாகும். ஒருவர் வாத்தியக்கருவியை இசைக்கும் தாலந்து அல்லது திறமை பெற்றிருந்து, அதன் அடிப்படையில் தேவனைத் துதிக்கும்படி அவன் வாத்தியக்கருவியை இசைக்க அனுமதிக்கப்படவேண்டுமானால், அந்த தாலந்துகளையும், திறமைகளையும் பெற்றிராத மற்றவர்கள் பற்றிய காரியம் என்ன? அந்தத் திறமைகளைக் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டுமென அப்பேர்பட்ட திறமைகளை ஆராதனைக்குள் திறமையற்ற அவர்கள் கொண்டுவரவேண்டுமென நாம் வாதிப்போமா? இந்தக் குறிப்பை நீங்கள் கவனிப்பீர்களஎன நான் நினைக்கிறேன்.

நீங்கள் வாத்தியக் கருவி இசையை வீட்டில் கொண்டிருந்தால் நிச்சயமாக நீங்கள் ஆராதனையில் அதை பயன்படுத்தலாம் என மீண்டும் இது விவாதிக்கப்படுகிறது,

உண்மை என்னவென்றால், நம்மால் ஆராதனைக்குள் கொண்டு செல்ல இயலாத அநேக பொருட்கள் வீட்டில் காணப்படுகிறது. என்னுடைய குடும்பமும் நானும் இசையை விரும்புகிறோம், நாங்கள் வானொலியில், அல்லது கேசட் ரிக்கார்டில் இசையை உற்றுக்கேட்பது வழக்கம், ஆனால் ஆராதனைக்கு இது வரும்போது எங்களைப் பிரியப்படுத்துகிற அந்த காரியங்களை நிறுத்தி விட்டு, கர்த்தரைப் பிரியப்படுத்துகிற காரியத்தையே செய்ய ஆரம்பிக்கிறோம். நாம் வீட்டில் ஐஸ்கிரீம் சாப்பிடவும், ஐஸ் டீ சாப்பிடவும் விரும்புகிறோம், ஆனால் இந்தக் காரியங்களெல்லாம் ஆராதனைக்கு வெளியே செய்யப்பட வேண்டியதென நாம் உணருகிறோம்.

பழைய ஏற்பாட்டில் தாவீதும் மற்றவர்களும் இதைப் பற்றி போதித்தார்களென உரிமைபாராட்டி ஆராதனையில் வாத்தியக் கருவி இசையைப் பயன்படுத்துவதை ஆதரிப்பது முக்கியமான வாக்குவாதங்களில் ஒன்றாயிருக்கிறது. அவ்வாறு இருந்ததோ இல்லையோ, பழைய ஏற்பாடு பிரமாணம் தொடர்ந்து நிலைத்திருக்கவில்லை என்பது உண்மை, ஏனென்றால் கிறிஸ்து அதை எடுத்துப் போட்டு ஒரு புதிய பிரமாணத்தைக் கொடுக்கும்படி சிலுவையில் மரித்தார். அதை நாம், "…. நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா.1:17) என வாசிக்கிறோம். கிறிஸ்து நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் ஒழிந்து போகாது என்று சொன்னார் (மத்.5:17,18). கிறிஸ்து சிலுவையின் மேல் மரித்தபோது அதை நிறைவேற்றினார், இவ்வாறாக பழைய பிரமாணத்தை நடுவிலிராதபடிக்கு எடுத்துப்போட்டார் (கொலோ.2:14). இந்தக் காரியம் இவ்வாறிருக்கையில், நாம் சங்கீதத்தை அல்லது பழைய ஏற்பாட்டின் மற்ற பகுதியை இன்று ஆராதனையில் வாத்தியகருவி இசையை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்த முடியாது. நம்முடைய தற்போதைய காலத்தில் செய்யாத மற்றும் செய்ய இயலாத பல காரியங்கள் அப்போது செய்யப்பட்டது.

இதை நியாயப்படுத்தும் முயற்சியில் இன்னொரு முக்கியமான வாக்குவாதம், பரலோகத்தில் இசைக் கருவி பயன்படுத்தப்படும் என்பதாகும். பரலோகத்தில் இசைக்கருவி இருக்குமானால், நிச்சயமாக நாம் இந்த பூமியிலே ஆராதனையில் இசைக் கருவி பயன்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர்கள் தீர்மானிக்கின்றனர். உண்மையாகவே அவர்கள் வாத்தியக்கருவியைப் பற்றிபேசிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் நேரடியான மனிதனால் உருவாக்கப்பட்ட, இயந்திர இசைக்கருவிகள் இருக்குமென வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தில் அல்லது வேறெங்கே வாசிக்க முடிகிறது? ஆனால் அப்படியே வாத்தியக்கருவியின் இசை இருக்குமானால், இன்று ஆராதனையில் அதை பயன்படுத்தும்படி நமக்கு கர்த்தர் அனுமதியளித்துள்ளார் என அர்த்தமாகிறதில்லை. பூமியிலே நாம் பெற்றிராத அநேகப் பொருட்கள் பரலோகத்தில் உள்ளன என்பது உண்மையான விஷயம். தேவன் குறிப்பாக ஆராதனையில் இன்று என்ன எதிர்பார்க்கிறார், மேலும் கடைசியாக பரலோகத்தில் தோற்றமளிக்கிற இருவேறுபட்ட பொருட்கள் என்ன?

வேதாகம வித்துவான்களும், பெரிய மதத்தலைவர்களும் பல வருடங்களுக்கு மேலாக வேதவாக்கியங்கள் மற்றும் வேறு குறிப்புகள் போன்ற இரண்டிலுமிருந்தும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஆராதனையில் வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்பதற்கான எந்த குறிப்பும் இல்லையென ஒத்துக்கொண்டுள்ளனர். ஆனபடியினால்

இந்த தலைவர்களில் பலர் அவர்களுடைய நாட்களிலும் மற்றும் நம்முடைய நாட்கள் வரைக்கும் தேவனை ஆராதிக்கையில் ஜனங்கள் வாத்தியக்கருவிகளைப் பயன்படுத்தவில்லை என்று தீர்மானித்தார்கள். உதாரணமாக, கத்தோலிக்க சபை இறுதியாகப் பிரிந்தது, இந்த பிரிவு தேவனைத் துதிப்பதில் வாத்தியக்கருவி இசை தங்களுடைய பாடல்களில் இடம்பெறவேண்டுமா என்ற கேள்வியைக் கொண்டுவந்தது என்பது பல காரியங்களில் ஒன்று. அந்தக் குழு இது சேர்க்கப்பட வேண்டுமென நினைத்து, ரோம கத்தோலிக்க சபையாக மாறியது, ஆகவே அவர்கள் இன்றுவரை அதை பயன்படுத்திவருகிறார்கள். இன்னொரு குழு வாத்தியக்கருவி இசையை பயன்படுத்த மறுத்து, கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபை என மாறியது, அவ்வாறாக இவர்கள் இன்று வரை தங்கள் ஆராதனை வேளைகளில் அவைகளைப் பயன்படுத்துகிறதில்லை. அதற்கப்புறம், சீர்திருத்தலும் பிராட்டஸ்டண்ட் இயக்கங்களிலும், ஜான் வெஸ்லி போன்ற மனிதர்கள், தேவன் தம்முடைய பரிசுத்த வார்த்தைகளில் முன்குறிக்கப்பட்டுள்ளபடி ஆராதனைக்குரிய தேவனுடைய தெய்வீக திட்டத்தில் இப்போ்பட்ட வாத்தியக்கருவி இசையை சேர்ப்பதற்கு தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புகையில், நாம் வாசிக்க வேண்டிய அநேக வேத வசனங்கள் உள்ளன. கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்ட பிற்பாடு கர்த்தரும், சீஷர்களும் உருவாக்கிய ஒரு கூற்றுடன் ஆரம்பிப்போம். “அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்” (மத்.26:30) என வாசிக்கிறோம். பிறகு பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு கால்கள் தொழுமரத்திலே மாட்டப்பட்டு அவர்கள் உட்காவலறையிலே அடைக்கப்பட்டார்கள், இவைகளெல்லாம் கர்த்தருக்கு ஊழியம் செய்ததினால் ஏற்பட்டது, இது, “நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்” (அப்.16:26) என்று சொல்லுகிறது. பவுல் கொரிந்துப்பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு “என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்” (2கொரி.14:14,15). என்று எழுதினான். யாக்கோபு, “உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்” (யாக்.5:13) என்றான். வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் சங்கீதம் பாடுவது பற்றி பல கூற்றுகள் உள்ளன. யோவான், “தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்றும் “அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியான வருடைய பாட்டையும் பாடி சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்” (வெளி.15:3) என்று எழுதினான். முன்பு அறிவித்தபடி வெளிப்படுத்தின விசேஷமும் எவ்வாறு யோவான் பரலோகத்தில்

சத்தத்தைக் கேட்டான் என்பது பற்றி கூறுகிறது, "...... நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது" (வெளி.14:2) என்றான். ஆனால் தயவு செய்து கவனியுங்கள் அவன் பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும் ஒரு சத்தத்தையும் கேட்டான் மேலும் அவன் நான்கு மிருகங்களைக் குறித்து பேசுகிறான். "..... பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேரே..." (வெளி.4:2,3). இங்கே வெளிப்படுத்தின புத்தகம் முழுவதும், யோவான் தான் பரலோகத்தில் என்ன பார்த்தான், என்ன கேட்டான் என்பதைப் பற்றி மனிதனுக்குத் தெரியப்படுத்தும் முயற்சியில் பல எண்ணிக்கையிலான அர்த்த விசேஷபாஷையைப் பயன்படுத்துகிறான். ஆனபடியினால் அவன் பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழுக்கம் போலவும், சுரமண்டலக்காரர் வாசிக்கிற சுரமண்டல ஓசையைப் போலவும் கேட்டான். ஆனால் பரலோகத்தில் நேரடியான, பூமிக்குரிய, வாத்திய கருவிகள் தான் இருந்தன என்பதாக அவன் அர்த்தப்படுத்தவில்லை.

சங்கீதம் பாடுவது அல்லது தேவனை ஆராதிக்கையில் நம்முடைய பாட்டுடன் வாத்தியக்கருவியின் இசையைக் கொண்டிருத்தல் போன்ற காரியத்தோடு, இது பிரமாணத்திற்கடுத்த ஒரு காரியமாகும். வேதாகமம் எங்கு பேசுகிறதோ அங்கே பேசுவோம், அது எங்கு அமைதியாயிருக்கிறதோ அங்கே அமைதியாயிருப்போம் அல்லது தேவன் சொல்லியிருக்கிறவற்றிற்குப் புறம்பாக நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ, அதை தொடர்ந்து செய்வோமா? வேதாகமம் கிறிஸ்து பரலோகத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொண்டவராயிருக்கிறாரெனவும், ஆனபடியினால் அவர் பேசியிருக்கிறார் எனவும் கூறுகிறது. ஆகவே நாம் அவருக்கும் அவருடைய வார்த்தைக்கும் கனத்தை செலுத்தி அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு மாறாக வேறொன்றையும் செய்யக்கூடாது. ஆனபடியினால் நாம் ஆராதனையில் வாய்மொழி சங்கீதம் அல்லது பாட்டு பாடுவதற்கு மட்டும் இடமளிக்கும்படி நம்முடைய இசைக் கருவி இசையைக் கட்டுப்படுத்தவேண்டும். அதன்பின் மட்டுமே, தேவன் அதில் பிரியமாயிருப்பாரென நிச்சயமுடையவர்களாயிருக்க முடியும்.

நீங்கள் எவ்வாறு தேவனை ஆராதிக்கிறீர்கள்? இது நீங்கள் அறிய வேண்டிய காரியம். நீங்கள் கிறிஸ்தவரா? இல்லையென்றால் நீங்கள் கிறிஸ்தவராக மாற நாங்கள் விரும்புகிறோம். கிறிஸ்து, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்....." (மாற்.16:16) என்றார். அதன் பின் கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்க்கிறார் என வாசிக்கிறோம் (அப்.2:47) இரட்சிக்கப்பட்ட ஒரு நபராக, கர்த்தருடைய சபையில் ஒரு அங்கத்தினனாக, தேவனை ஆவியோடும் உண்மையோடும் நீங்கள் தொழுது கொள்ள முடியும் (யோவா.4:24).

**வாசகர் கடிதம்**

ஆசிரியர் B.அர்ஜுனன் அவர்களுக்கு வாழ்த்துக்கள். ஜுலை 2023 இதழ் எனக்கு கிடைக்கவில்லை என்றபோதும் அதற்காக தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சி மிகவும் என் மனதை நெகிழச் செய்தது.

அவதி அவசரம் நிறைந்த இந்த உலகில் இறைவனுக்கென்று ஒதுக்கும் நேரம் மிகமிகக் குறைவு. கேள்வியும் வசனரீதியான பதிலும் பிரயோஜனமுள்ளது மனதில் பதியவைக்கும் வெளியீடு. நன்றி. இதழை அடுத்தவர்களுக்கு கொடுத்து இயேசுவை அறிமுகப்படுத்துவதில் உள்ள மகிழ்ச்சி வேறு எதுவுமில்லை.

**K.S.மாணிக்கவாசகம், திருச்சி**



ப.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

25


# பரிசுத்த வேதாகமத்தில் கிதியோன்
# Gideon In The Holy Bible

1. இஸ்ரவேலின் 5ம் நியாயாதிபதி மறு பெயர்கள் 'யெருபாகால்' 'எருப்பேசேத்' - நியா.6:32
2. மனாசே கோத்திரத்தைச் சேர்ந்தவன் - நியா.6:15
3. இவன் ஒரு பராக்கிரமசாலி, கோதுமையை மீதியானியரின் கைக்குத்தப்புவிக்க போரடித்தான் - நியா.6:11-13
4. உனக்கு இருக்கிற இந்தப் பெலத்தோடே போ - நியா.6:14
5. என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் - நியா.6:15,16
6. தேவதூதனுக்கு செலுத்திய காணிக்கை - நியா.6:17
7. கர்த்தருடைய தூதனை முகமுகமாய் கண்டான் - நியா.6:22
8. பாகாலின் பலிபீடத்தை தகர்த்து, அது தானே தனக்காக வழக்காடட்டும் என்றான் - நியா.6:29
9. தண்ணீரை நக்கிக்குடித்த 300 பேராலே இரட்சிப்பு - நியா.7:6
10. நல்ல விருத்தாப்பியத்திலே மரித்து கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டான் - நியா.6:32

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***கிதியோனின் நாட்களில் தேசம் எத்தனை வருஷம் அமைதலாயிருந்தது மற்றும் கிதியோனின் 70 குமாரரை ஒரே கல்லின்மேல் கொலைசெய்தவன் யார்?***

**விடை:** 40 வருஷம் "...தேசமானது கிதியோனின் நாட்களில் நாற்பதுவருஷம் அமைதலாயிருந்தது (நியா.8:28). அபிமெலேக்கு- "அவன் ஒப்ராவிலிருக்கிற தன் தகப்பன் வீட்டிற்குப் போய், யெருபாகாலின் குமாரராகிய தன் சகோதரர் எழுபது பேரையும் ஒரே கல்லின்மேல் கொலைசெய்தான்; ஆனாலும் யெருபாகாலின் இளைய குமாரனாகிய யோதாம் ஒளித்திருந்தபடியினால் அவன் தப்பினான்"(நியா.9:4,5)



பு.ஏ

# வேதாகம கதாபாத்திரங்கள்
# Bible Characters

26



## பரிசுத்த வேதாகமத்தில் மரியாள்
## Mary In The Holy Bible

| | | |
|---|---|---|
| 1. | கன்னிகையின்மேல் மரியாள் | - லூக்.1:26,27 |
| 2. | தேவனிடத்தில் கிருபை பெற்றாள் | - லூக்.1:28-30 |
| 3. | இது முதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள் | - லூக்.1:46 |
| 4. | நியாயப்பிரமாணத்தின்படி அவரை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தார்கள் | - லூக்.2:21-32 |
| 5. | 12 வயதில் இயேசு: மரியாள் அவரை நோக்கி எங்களுக்கு இப்படிச் செய்தாய் என்றார்கள் | - லூக்.48,49 |
| 6. | மரியாள் அவர்களுக்கு திராட்சரசம் இல்லை என்றார். அவர் ஸ்திரீயே எனக்கும் உனக்கும் என்ன என்றார் | - யோவா.2:3 |
| 7. | மரியாளுக்கு இயேசுவுக்கு பின் பிள்ளைகள் இருந்ததாக படிக்கிறோம் | - மாற்.6:3 |
| 8. | இயேசு தம்முடைய தாயை நோக்கி அதோ உன் மகன் என்றார் | - யோ.19:25 |
| 9. | கல்லறையை பார்க்க வந்தார்கள் | - மத்.28:5-8 |
| 10. | இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பின்பு கூடின கூட்டத்தில் மரியாள் | - அப்.1:14 |

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது என்றவள் யார்?**


**விடை:** எலிசபெத் - "என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது" (லூக்.1:43)



# மோசேயின் பிறப்பு முதல் அவனுடைய இறப்பு வரை



நாம் பார்க்கிற இந்த படம் எகிப்தில் 2023ல் ஒரு பகுதியில் எடுக்கப்பட்ட படம். இந்தக்கட்டிடத்தில் செங்கல் சுவர் பயன்படுத்தப்பட்டிருக்கிறதைப் பாக்கிறீர்கள். கிறிஸ்துவுக்கு முன் இஸ்ரவேலர் எகிப்தில் செங்கல் சுடும் வேலையில் அதிகமாக அடிமைகளாக பயன்படுத்தப்பட்டனர். அவர்கள் தேவனை நோக்கி கூப்பிட்டபோது தேவன் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டார். அப்பொழுது இஸ்ரவேலர் பலுகிப்பெருகுவதை விரும்பாத ராஜா அவர்களை ஒடுக்கும்படி, அவர்களுடைய ஜீவனை கசப்பாக்கினான். அவர்களுக்கு மருத்துவம் செய்யும்போது ஆண்பிள்ளையானால் கொன்று போடுங்கள் பெண்பிள்ளையானால உயிரோடிருக்கட்டும் என்றான். மேலும் எகிப்தின் பார்வோன் அவர்களுக்கு பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டுவிடவும், பெண்பிள்ளைகளையெல்லாம் உயிரோடே வைக்கவும் தன் ஜனங்கள் எல்லாருக்கும் கட்டளையிட்டான்.





அப்பொழுது லேவியின் குடும்பத்தாரில் ஒரு ஸ்திரீ கர்ப்பவதியாகி, "ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று, அது அழகுள்ளது என்று கண்டு, அதை மூன்றுமாதம் ஒளித்துவைத்தாள்" (யாத்.2:2) பின்னும் ஒளித்துவைக்கக்கூடாமல் அதை ஒரு நாணற்பெட்டியை எடுத்து அதிலே பிள்ளையை வைத்து நதியோரத்தில் வைத்தாள். அதை கவனிக்கும்படி தன் மகள் மிரியாமுக்கு சொன்னாள். அங்கே பார்வோனுடைய குமாரத்தி நதியில் ஸ்நானம் பண்ண வந்த போது அந்த பிள்ளை அழகுள்ளது என்று கண்டு தன் தாதியை அனுப்பி அந்த குழந்தையை தனக்கென்று எடுத்துக்கொண்டாள். அதை வளர்க்கக் கூடிய தாயை அருகாமையில் நின்று கொண்டிருந்த மிரியாம் மூலமாக பெற்றுக்கொண்டாள். இப்படியாக மோசே எகிப்திலே வளர்க்கப்பட்டான்.



மோசே பின்பு தான் யார் என்பதை அறிந்து கொண்டு அங்கிருந்து விலகியோடி மீதியான் தேசத்திற்கு வந்தான். அங்கே ரெகுவேலின் குமாரத்திகள் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினார்கள். அவர்களுக்கு உதவி செய்தான். இதைக் கேள்விப்பட்ட அந்த மனிதன் அவளுடைய குமாரத்தி சிப்போராளை விவாகம் செய்துகொடுத்தான். அங்கே தங்கி மோசே ஆடுகளை மேய்த்துக்கொண்டு வந்தான்.



அப்பொழுது கர்த்தர் முட்செடியில் அவனுக்கு தரிசனமானார். அது சீனாய் மலையில் இன்றும் இருக்கிறது அதை நேரடியாக சென்று பார்த்து அதை புகைபடம் எடுத்து வெளியிடுகிறோம். அந்த முட்டிசெடி வெந்துபோகாமல் இன்றும் இருக்கிறது மிகவும் ஆச்சரியப்படவேண்டிய ஒன்று. கடுமையான, வரட்சியான சீனாய் மலையில் அது இதுக்கிறது. மோசே பத்து கட்டளைகளைப் பெற்றுக்கொண்ட மலையும் அதுவே

**- தொர்ச்சியை 18 பக்கம் பார்க்க**

## வேத அறிவுப்போட்டி 274-ன் விடைகள்

1. மோசே - உபா.33:3
2. நீடிய - 2பேது.3:9
3. 100 - யோசு.21:32
4. தேவனை - 1யோவா.1:10
5. மனோவாவும் அவன் மனைவி - நியா.13:20
6. சிறு புத்தகம் - வெளி.10:10
7. சவுல் - 1சாமு.18:25
8. சூரியனைப்போல - மத்.13:43
9. குருடரும் சப்பாணிகளும் - 2சாமு.5:6
10. இயேசு - மாற்.10:18

### சரியான பதில் எழுதியவர்கள்

1. P. சந்திராடேனியேல் - நாஞ்சான்குளம்
2. Mrs. பாலின் மார்ட்டின் - காரைக்குடி
3. Mrs. பியூலா ஜேசுரத்தினம் - புதுச்சேரி
4. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் - மதுரை
5. J. மேரிஜெயக்குமார் - மதுரை
6. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
7. Mrs. ஃபுளோரா சுந்தர் - மதுரை
8. A. டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
9. Mrs. வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
10. K.M. சாந்தி - எம்.வாடிப்பட்டி
11. Mrs. ஜெயாபாணிஜெபராஜ் - மேற்கு தாம்பரம்
12. K. ராணிமூர்த்தி - ஏர்வாடி
13. D. விஜயா காந்தி - கூத்தம்பாக்கம்
14. J. பிச்சை - விருதுநகர்
15. S. சாந்தகுமாரி - நாசரேத்
16. S. ஜாய்சந்திரகாந்தா - நல்லூர்
17. R. கஸ்தூரி - ஒட்ட நத்தம்
18. M. ராமச்சந்திரன் - ஒட்ட நத்தம்
19. D. அன்புக்கமலம் - காரைக்குடி
20. Mrs. ஜெனிதர்மராஜ் - திருநெல்வேலி
21. R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
22. Mrs. ஜெமிநல்லையா - கோவை
23. Mrs. ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
24. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
25. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
26. A. ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
27. Mrs. ரூபவல்யா - தூத்துக்குடி
28. J. செல்வராஜ் - புத்தியம்புத்தூர்
29. S. அன்னம்மாள் - தூத்துக்குடி
30. Mrs. ஜாய்மேத்யு - வி.கே.புரம்
31. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
32. R. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
33. J.S. ஜெயாமேரித்தாய் - திண்டுக்கல்
34. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் - திருநெல்வேலி
35. A. ஜான்ராஜ் - ஐயம்பாளையம்
36. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
37. J. ஆலிவ் - கோவை
38. Mrs. ஹெத்சிசெல்வின் - சென்னை
39. Mrs. சந்திராஆல்பர்ட் - கீரன்குளம்
40. S. ஓசியா ஹரிராகவன் - வேப்பம்பட்டு
41. Mrs. ஃபிராங்களினாஜான் - ஊட்டி
42. Mrs. ஃபிளாரன்ஸ் சித்தர் - சென்னை

## வேத அறிவுப்போட்டி 275-ன் விடைகள்

1. யெரொபெயாம் - 1இரா.12:31
2. சந்தோஷப்படுங்கள் - லூக்.10:20
3. கனி - 2இரா.19:30
4. யோவான்ஸ்நானன் - யோவா.1:16
5. கர்த்தர் - 1நாளா.21:27
6. பவுல் - அப்.26:25
7. சாலொமோன் - 2நாளா.9:22
8. மீதியாயிருப்பவர்கள் - ரோம.9:27
9. சத்துருக்களை - எஸ்றா 4:3
10. தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார் - 1கொ.1:24

### சரியான பதில் எழுதியவர்கள்

1. K.M. சாந்தி - எம்.வாடிப்பட்டி
2. Mrs. பாலின் மார்ட்டின் - காரைக்குடி
3. Mrs. பியூலாஜேசுரத்தினம் - புதுச்சேரி
4. P. சந்திராடேனியல் - நாஞ்சான்குளம்
5. Mrs. ஜேன்தர்மராஜ் - திருநெல்வேலி
6. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
7. Mrs. ஃபிராங்களினாஜான் - ஊட்டி
8. A. டேவிட் ஜெயசந்திரன் - மதுரை
9. Mrs. கெத்சி செல்வின் - சென்னை
10. S. சாந்தகுமாரி - நாசரேத்
11. S. ஜாய்சந்திர காந்தா - நல்லூார்
12. J. ஆலிவ் - கோவை
13. R. கஸ்தூரி - ஒட்ட நத்தம்
14. M. ராமசந்திரன் - ஒட்ட நத்தம்
15. Mrs. இம்மானுவேல் - ஈரோடு
16. Mrs. வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
17. E. அதிசயம் - பனைகுடி
18. K. ராணிமூர்த்தி - ஏர்வாடி
19. Mrs. ரூபவல்யா - நாசரேத்
20. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
21. C. அருள்ராஜ் - சென்னை
22. A. அன்னாள் ஜெபக்கனி - கோவை
23. J. செல்வராஜ் - தூத்துக்குடி
24. Mrs. ஜெயாபானிஜெபராஜ் - மேற்குதாம்பரம்
25. Mrs. ரூத்ஜெயராணிஅன்புராஜ் - திருநெல்வேலி
26. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
27. Mrs. ஃபிளாரன்ஸ் சித்தர் - சென்னை
28. Mrs. ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
29. Mrs. ஜெமிநெல்லையா - கோவை
30. Mrs. ஜெயசீலிஜான் - தூத்துக்குடி
31. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
32. Mrs. நவரத்தினம் ஞானராஜ் - நாசரேத்
33. R. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
34. S. ஓசியா ஹரிராகவன் - வேப்பம்பட்டு
35. Mrs. ரோஸ்லின் ஜேம்ஸ் - சென்னை
36. J. மேரிஜெயக்குமார் - மதுரை
37. Mrs. ஃபுளோரா சுந்தர் - மதுரை
38. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் - மதுரை
39. Mrs. ருக்மணிஜெயசீலன் - தேனி
40. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
41. D. சாந்தாதேவி - பன்னைப்புரம்

"பலியை அல்ல
இரக்கத்தையும், தகனபலிகளைப்பார்க்கிலும்
தேவனை அறிகிற அறிவையும் ,
விரும்புகிறேன்"
ஓசியா 6:6

## நான் உலகத்தின் ''வேடிக்கை''யான காரியங்களை அநுபவிக்க விரும்புகிறேன்

## I Want To Enjoy 'Fun' Things of The World

-Betty

ஒரு கட்டுப்பாடான வாழ்வை தெரிந்துகொண்ட, மற்றும் தம் நண்பர்கள் மீது அன்பு காட்டுகிற கிறிஸ்தவர்களைப் பார்க்கின்ற அநேகர் இதற்கு எதிரிடையான ஒரு உலகப்பிரகாரமான இன்ப வாழ்வோடு இசைந்தவர்களாய், **அவர்கள் குறைந்தபட்சம் தங்களுடைய இளமைப் பருவத்திலாவது உலகப்பிரகாரமான காரியங்களை அநுபவிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கின்றனர்.** தங்களுடைய நினைவுகளில், கிறிஸ்தவர்கள் சுய-வெறுப்பு மற்றும் சிலுவை-சுமத்தல் போன்ற வேதனை நிறைந்த காரியங்களில் ஒன்றான வாய்விட்டு சிரிப்பதற்கும் கட்டுபாடுள்ள ஒரு வாழ்வு வாழவேண்டியவர்களாக இருக்கின்றனர் என எண்ணுகின்றனர். யார், ஆனால் ஒரு மதியீனன் தாமாகவே உலகத்தின் எல்லா ‘‘நன்மை’’யான காரியங்களை இழப்பானா?

**உலகம் கொடுக்கிறதான இன்பங்கள் எவையெவை?**

✧ **உலக இன்பம்**. ஒரு நபர் குடி, போதை, புகைபிடித்தல், சூதாடுதல், ஒழுக்கங்கெட்டசெயல், ஆபாசமான பாஷை, வெறுப்பு, மற்றும் சோதனைக்குரிய மற்ற நடத்தை போன்ற எந்த செயலையும் அனுமதிக்க விரும்புகிற இவைகளில் உலக இன்பத்திற்கு சுதந்திரம் உண்டு.

✧ **தவிர்ப்பதிலிருந்து சுதந்திரம்:** தவிர்ப்பதிலிருந்து சுதந்திரம் என்பது ‘‘விதிகளை’’ மீறும் ஒரு செயலாகும் அவன்/அவள் தன் இச்சைக்கேற்ப உடுத்திக்கொள்வது, தான் விரும்புகிற இடத்திற்குச் செல்வது, தான் தெரிந்தெடுக்கிற வாழ்க்கை முறையினை பின்பற்றுவது, மற்றவர்களுக்காக பொறுப்புள்ள தியாகம் செய்வதை தவிர்ப்பது ஆகும். இப்படிப்பட்ட சுதந்திரத்துடன், அங்கே பரஸ்பர உதவி, நீதி நெறி. ஒழுக்கம் அல்லது சமயக்கட்டுப்பாடுகள் போன்றவைகள் இல்லை. அங்கே இப்படிப்பட்ட காரியங்கள் ‘பாவம்’போலவும், இதைச் செய்ய வேண்டும் அல்லது இதைச் செய்யக்கூடாது போன்ற மனசாட்சிக்குரிய அறிவுறுத்தல் போலவும் தோற்றமளிப்பதில்லை.

✧ **ஒரு நபருடைய சுய-நலன்களின் உயர்வு:** ஒரு நபருடைய சுய-நலன்களின் உயர்வு என்பது பொய், ஏமாற்று, அல்லது களவு போன்றவைகள். ஒருவர் பெற விரும்புகிறவற்றைக் கொண்டுவருமானால் இவைகளை அவன் செய்ய முடியும்; ஒருவனுடைய சுய சரீரத்தின்மேல் முழு அதிகாரம் செலுத்த கருச்சிதைவு அனுமதிக்கிறது, தீராத கொடிய வியாதியஸ்தரை மாிக்கவைத்தல் ஒருவனை தேவையிலுள்ளளோர் அல்லது உதவியற்றோர் மேலுள்ள பொறுப்புகளின் அதிகாரத்திலிருந்து விடுவிக்கிறது; உறவுகளில் வாழ்வது தனிப்பட்ட சுதந்திரத்தையும் அனுமதிக்கிறது. ஒவ்வொரு தெரிந்தெடுத்தல் மற்றும் ஒவ்வொரு தீர்மானத்திற்கும் எனக்கு எதுவெல்லாம் சரியோ அது ‘சரி’ என்பதே அடிப்படை ‘‘தத்துவம்’’ என்பதாகயிருக்கிறது. **ஆனால் இவ்வுலக இன்பங்கள் என்னென்ன விளைவுகளைக் கொடுக்கிறது?**

✧ ஒரு நபர் அனைத்து உலக இன்பங்களுக்குக்கான கதவுகளை மனதார திறக்கிற பொழுது, சாத்தான் ஒரு உணர்ச்சி மிகுந்த நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் உலக இன்பங்களிலிருந்து வரும் விளைவுகள் என்ன? யார் மதுவிருந்திலிருந்தும், ஆல்கஹாலுடன் தன் உடல்நலத்தை அழிக்கிறதிலிருந்தும் விடுவித்துக்கொள்ள எச்சரிக்கையாயிருக்கிறார்? யார் ஆல்கஹாலிலும் மற்ற துர்ப்பழக்க வழக்கங்களினாலும் தன் குடும்ப போஜனத்தையும், வீட்டையும், துணிமணிகளையும் வீணாக்குகிறார்? யார் ஒருவித குடிபோதைமயக்கத்திலிருக்கும் போது தன் மனைவியையும் குழந்தைகளையும் அடிக்கிறான்?

யார் அளவுக்கு மிஞ்சிய மயக்கமருந்தினால் மரிக்கிறான்? யார் அதிகமான போதை மருந்து மயக்கத்தினால் உலகத்தின் அசுத்தத்தில் வசிக்கிறபோது தன் குழந்தைகளை

வீட்டில் தனியாக விட்டுவிட்டுச் செல்லுகிறாள்? தன்னுடைய தாயின் உலகஇன்பமான போதைபழக்கத்தினால் யாருடைய குழந்தைகள் போதைப்பழக்கத்திற்கு அடிமையாக அல்லது கொடூரமான அங்கீனமாக மற்றும் மூளை வளர்ச்சி குறைவாக பிறந்துள்ளனர்?

யார் பல வருடங்களாக புகைப்பிடித்தபின் மூச்சுவிடமுடியாதபடி நுரையீரல் நோயினால் அவதிப்படுகின்றனர்? யார் உணர்ச்சிமிக்க, நிதி சம்பந்தபட்ட, உதவியற்று மரிக்கிறவர்களாக, மருத்துவத்திற்காக எண்ணற்ற கிரயம் செலுத்தியும் ஒரு போதும் குணமாக்கமுடியாத நோயினாலும் அவதிபடுகிறான்?

யார் தான் கொண்டிருந்த அனைத்தையும் சூதாடி தொலைத்து தன்னுடைய வாழ்க்கை சாப்பாட்டிற்கும் வழியில்லாமல் போனதினால் தற்கொலை செய்கிறான்? மற்றவர்கள்போல் வெறுப்பு மற்றும் மனகசப்பு நிறைந்த இருதயத்தைக் கொண்டிருப்பதினால் உயர் இரத்த அழுத்தமும் சரீரப் பிரச்சனைகளையும் யார் அதிகரிக்கிறான்? யார் சகிப்புத்தன்மையற்ற மனநிலைகொண்டிருப்பதினால், குடும்பத்திற்காக, நேசிக்கப்பட்டவர்களுக்காக, நண்பர்களுக்காக, கூட்டாளிகளுக்காக வாழ்க்கையை நாசமாக்குகிறான்?

✦ ஒரு மனிதன் மனதில் எல்லா வேலிகளையும் நீக்குகிற பொழுது, மறுபடியும் சாத்தான் ஒரு மிக நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் ஒருவன் தான் விரும்புகிறதையெல்லாம் செய்கிறபோது, என்ன நடக்கிறது? அவன் 'விதிகளை மீறுவதில்' சந்தோஷமடையலாம், மேலும் அவன் தெரிந்து கொள்ளுகிறதை யெல்லாம் செய்வதில் சுதந்தரவாளியாக இருக்கின்றோம் என நினைக்கலாம், ஆனால் அவன் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவனாக மாறுகிறான். எல்லா விதிகளும் சிறந்த வாழ்க்கை, குறைந்த எதிர்ப்புதன்மை மற்றும் மனிதனுக்கிடையே குறைவான பிரச்சனைகளை உருவாக்கவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒருவன் விதிகளை புறம்பாக்கும்போது, பொதுவாக சமுதாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பிலிருந்து அவன் தாமே புறம்பாக்கப்படுகிறான்.

✦ ஒரு மனிதன் எதையும் செய்ய ஆயத்தமாக இருக்கும் பொழுது, மறுபடியும் சாத்தான் ஒரு மிகப்பெரிய நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் ஒரு மனிதன் தன் சுய- நலனுக்காக ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரையும் தியாகம் பண்ணுகிறபோது என்ன நடக்கிறது? பொய்,ஏமாற்று, களவு போன்றவைகள் அம்பலப்படுத்தப்படும்போது, யார் ஒவ்வொன்றையும் இழக்கிறான்? பாலியல் தொற்று வியாதிகள் மூலம், எய்ட்ஸ் வியாதியின் மூலம், கருச்சிதைவினால் உணர்ச்சிமிக்க சரீரத் தழும்புகள் மூலம், யாருடைய சரீரம் அழிந்து போகும்? உதவியற்றவனாக, முதியோனாக குறைபாடுள்ளவனாக, ஒருவன் "மாய்த்துக்கொள்ள"-கொன்றுவிட-ஆயத்தமாயிருந்தால், அவன் உதவியற்றவனாகவும், வயதானவனாகவும், குறைபாடுள்ளவனாகவுமிருக்கும் போது அவனுக்கு என்ன நேரிடும்? ஒருவனுடைய நியாயங்கள் மற்றவர்களுடைய நியாயங்களால் நசுக்கப்படும் பொழுது, அவர்கள் குற்றவாளிகளாக மாறுகின்றனர்.

தேவனுடைய ஞானத்தில், நீண்டகாலத்திற்கு முன்பாக அவர் தம்முடைய வார்த்தையில், "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"(ரோம.6:23) என எச்சரித்தார். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவோமானால், அவர் ஏற்படுத்தின இந்தக்கட்டளை பார்ப்பதற்கு ஒரு நியாயமற்ற கொடுங்கோன்மையான 'கட்டளை' அல்ல. இது ஒரு உண்மையான கூற்று. பாவம் தவிர்க்க முடியாத விளைவுகளைக் கொண்டுவரும்.

திரும்பச் சென்று உங்களுடைய தீர்மானத்தை மறு ஆய்வு செய்யுங்கள். சாத்தானுடைய தந்திரமான பொய்களை நம்பி உங்களை அழித்துக் கொள்ளாதீர்கள்.



- 14 பக்கம் தொடர்ச்சி

எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரவேலரின் வேண்டுதலை கேட்ட கர்த்தர் அவர்களை எகிப்திலிருந்து விடுதலை செய்ய மோசேயை தெரிந்து கொண்டார். அவன் கர்த்தரை சந்திக்கும்போது அவன் கேட்டுக்கொண்டபடியாக இஸ்ரவேலர் தன்னை நம்பும்படி மூன்று அற்புதங்களை தேவ சமுகத்தில் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு முன்பாகவும் எகிப்தியருக்கு முன்பாகவும் அவைகளை செய்து அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினான். அவர்களுக்கு முதலாவது இருந்த ஒரு சோதனை எகிப்து கடல் சிவந்த சமுத்திரம். அதை விசுவாசத்தினால் கடந்தார்கள் இருபுறமும் அவர்களுக்கு மதிலாக நின்று வழிவிட்டது ஆறுலட்சத்திற்கும் மேலானவர்கள் தங்களுடையவர்களோடு கடந்தார்கள். இன்று அது சூயஸ்கால்வாய் என்று அழைக்கப்படுகிறது. அது கடலுக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ளது. மூன்று கிலோ மீட்டர் தூரம் கொண்டது. அதற்கு மேலே கப்பல் செல்லும். ஆதி சீஷர்கள் இவ்வழியாகவே இந்தியா போன்ற இடங்களுக்கு சுவிசேஷம் சொல்ல கடல் மார்க்கமாக வந்தார்கள்.



நாம் அறிந்திருக்கிறபடி 40 ஆண்டுகளாக வனாந்திரத்தில் இஸ்ரவேலரை மோசே வழிநடத்திக்கொண்டு வந்தார். இந்த இடங்களை பாருங்கள் அங்கே தண்ணீர் இல்லை மேகம் இல்லை மரம் செடிகொடிகள் இல்லை எந்த விதமான உணவுகளும் இல்லை. பல கிலோ மீட்டருக்கு அப்பால் சில ஊற்றுக்கள் சோலைகள் காணப்படுகின்றன. இந்த இடத்தில் அவர்களை வழிநடத்தின தேவன் பகலில் அவர்களுக்கு மேகஸ்தம்பத்தை கொடுத்தார். இரவில் அக்கிஸ்தம்பத்தை கொடுத்தார். நாற்பது ஆண்டுகள் மன்னாவினாலும் காடைகளினாலும் அவர்களை போஷித்தார். அப்பொழுது அவர்களுக்கு அது தேவை. படத்தைப் பார்த்தாலே உங்களுக்கு புரியும்.



ஓரேபிலே கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணினார்கள். "இஸ்ரவேல் புத்திரர் வாதாடினதினிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று அவர்கள் கர்த்தரைப் பரீட்சை பார்த்ததினிமித்தமும், அவன் அந்த ஸ்தலத்திற்கு மாசா என்றும் மேரிபா என்றும் பேரிட்டான்" (யாத்.17:7)



வனாந்தர பயணத்தில் ஆரோன் மரித்துவிடுகிறான் அவனை அங்கே அடக்கம் செய்தார்கள். அந்தக் கல்லறை இன்றும் இருக்கிறது அதைத்தான் இந்தப்படத்தில் பார்க்கிறீர்கள். ஆரோன் மோசேக்கு உதவியாக இருந்த அவனுடைய சகோதரன்.



பின்பு "கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான். அவர் அவனை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம்பண்ணினார். இந்தநாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான்" (உபா.34:5,6). இந்த இடங்களை பராமரிக்கிறவர்கள் ஒரு இடத்தை தேர்வு செய்து இந்தப்பகுதியாக இருக்கலாம் என அதை குறித்துவைத்துள்ளனர்.

# தமிழக கிறிஸ்துவின் சபை ஊழியர்கள் அவர்கள் குடும்பத்துடன்



**சுவிசேஷத்தை அறிவிப்பது எங்கள்மேல் விழுந்த கடமை. வாருங்கள் சுவிசேஷத்தால் இணைவோம்**



'ஒரே வழி' தபால் வழி வேதபாடம்
**The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று
**Certificate** பெற்றுக்கொள்ளுங்கள்
வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

## ஜெபியுங்கள்

- நமது இதழின் ஆசிரியர் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் யோர்தான், பாலஸ்தீனம், எருசலேம் மற்றும் எகிப்து போன்ற நாடுகளுக்கு குடும்பத்துடன் சென்று சுகத்தோடு திரும்ப கிருபை செய்த தேவனுக்கு நன்றி சொல்லி...
- கடந்த 18ம் தேதி தமிழக கிறிஸ்துவின் சபை ஊழியர்களுக்கான கூட்டம் சிறப்பாக நடைபெற்றமைக்காக...
- அக்டோபர் மாதம் சென்னையில் நடைபெறவுள்ள வேர்ல்டு இவான்சலிசம் பள்ளிக்காக...



**"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" – 1தெசலோனிகேயர் 5:17**

## நான் ஒரு கிறிஸ்தவன்
## I am a Christian

Mike Aleshire

**"நான் ஒரு கிறிஸ்தவன்"** என சொல்லும் போது, "நான் பரிசுத்தமாக வாழ்கின்றேன்" என்று உரக்க சொல்லுகிறதில்லை. "நான் காணாமல் இழந்து போனவன், ஆனால் இப்போதோ நான் கண்டுபிடிக்கப்பட்டு மன்னிக்கப்பட்டவன்" என்று சொல்லச் சொல்லுகின்றேன்.

**"நான் ஒரு கிறிஸ்தவன்"** என சொல்லும்போது, " நான் அதைப் பொருமையுடன் பேசுகிறதில்லை". நான் இடறிவிழுந்து கிறிஸ்து என்னுடைய வழிகாட்டியாக இருக்கவேண்டுமென நான் அறிக்கையிடுகிறேன்.

**"நான் ஒரு கிறிஸ்துவன்"** என சொல்லும்போது, நான் பெலனுள்ளவனாயிருக்க முயற்சிக்கவில்லை. நான் பலவீனமாக இருக்கிறேன், தொடர்ந்து செல்ல அவருடைய பலம் தேவையென கருதுகிறேன்.

**"நான் ஒரு கிறிஸ்தவன்"** என சொல்லும்போது, நான் வெற்றியைப் பற்றி தற்பெருமை கொள்ளவில்லை. நான் தோல்வியுற்றதை ஒப்புக்கொண்டு என் குழப்பத்தைத் தெளிவுபடுத்த தேவன் தேவை என்கிறேன்.

**"நான் ஒரு கிறிஸ்தவன்"** என சொல்லும்போது, நான் சரியானவன் என்று கூறவில்லை, எனது குறைபாடுகள் மிகவும் வெளிப்படும், ஆனால் நான் அதற்குத் தகுதியானவன் என்று தேவன் நம்புகிறார்.

**"நான் ஒரு கிறிஸ்தவன்"** என சொல்லும்போது, நான் இன்னும் வலியின் வாசனையை உணருகிறேன். எனக்கு மனவேதனைகள் உள்ளபடியால், அவருடைய நாமத்தில் விண்ணப்பிக்கிறேன்.

**"நான் ஒரு கிறிஸ்தவன்"** என சொல்லும்போது, நான் உங்களைக் காட்டிலும் பரிசுத்தவான் அல்ல. எப்படியோ நான் தேவனுடைய நல்ல கிருபையைப் பெற்றுக் கொண்ட ஒரு சாதாரண பாவி!

## நான் யார்? – Who Am I?

- நான் தேவனிடத்தில் கிருபை பெற்றேன்
- நான் கன்னியாக இருந்தபோது ஒரு குமாரனைப் பெற்றேன்
- எல்லாச் சந்ததியாரும் என்னைப் பாக்கியவதி என்கிறார்கள்
- கானாவூர் கலியாண வீட்டில் இருந்தேன்
- ஆண்டவருடைய தாயார் எனப் பேசப்பட்டேன்
- இயேசு என்னை நோக்கி: ஸ்திரீயே அதோ, உன் மகன் என்றார்
- இயேசுவின் உயிர்தெழுதலுக்குப் பின் நடந்த முதல் ஜெபக்கூட்டத்தில் இருந்தேன்



# தெரிந்து கொள்வோம்

ஆபிரகாம் வாழ்ந்த நாட்களில் லோத்தைப்பற்றி படிக்கிறோம். "ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னை விட்டுப்பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால்,



நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான். அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும்முன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது" (ஆதி.13:8-10). இந்த இடத்தை லோத்து தெரிந்துகொண்டான். இங்கே வாசம் பண்ணினான். ஆனால் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருந்தது. அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருந்தது. எனவே கர்த்தர் அவைகளை அழிக்கசித்தமானார். தேவதூதர்கள் லோத்தையும் அவனுடைய மனைவி, இரண்டு மகள்களையும் கைகளைப்பிடித்து பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய்விட்டு உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே, இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார். "அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள்" (ஆதி.19:26). இந்தப்படத்தில் உள்ளபடி.

இந்த சோதோம் கோமோரா பட்டணங்களை இப்பூமியில் வாழுகின்ற அனைவருக்கும் திருஷ்டாந்தமாக வைத்திருக்கிறார். "அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும் அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப் போல் விபசாரம்பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்" (யூதா 7). கர்த்தர் வானத்திலிருந்து கந்தகத்தை வருஷிக்கப்பண்ணி அவைகளை அழித்துப்போட்டார். அவைகள் எல்லாம் அழிந்து கடலிலே கலக்கப்பட்டு இன்றுவரை அது சவக்கடலாக இருக்கிறது. அதில் அதிமான உப்பு இருப்பதால் அதிலே நாம் நீந்தி செல்ல முடியாது அதில் மிதக்கத்தான் முடியும்.



சிறுவர் பகுதி

# ஞாயிறுபள்ளி - Sunday School

வேத பகுதி: யோவான் 6:39



இராணுவ மருத்தவமனை ஒன்றில் ஜேம்ஸ் என்ற இராணுவ வீரன் கொடிய காயங்களுடன் சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்து ஜெபிப்பதற்காக அவனுடைய சபை போதகர் மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். ஜேம்ஸ் மிகவும் மோசமான நிலையிலிருக்கிறான் என்பதை அறிந்தார் அந்த ஊழியக்காரர். அப்பொழுது ஜேம்ஸ் இலேசாக கண்களைத் திறந்து, போதகரைப் நோக்கி எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும் என்று சொல்லி தன்னுடைய பாக்கெட்டிலிருந்து முகவரிகள் அடங்கிய சிறிய ஒரு நோட்டை எடுத்து அதில் தன்னுடைய ஞாயிறு பள்ளி ஆசிரியையின் முகவரியைச் சுட்டிக்காட்டி ஐயா என்னுடைய சார்பில் இந்த ஞாயிறுபள்ளி ஆசிரியைக்கு ஒரு கடிதம் எழுதவேண்டும் என்று அவரைக் கேட்டுக்கொண்டான்.

அவன் சொல்ல அவர் எழுதினார். “அன்புள்ள ஞாயிறுபள்ளி ஆசிரியருக்கு, தேவனுடைய வசனத்தில் சொல்லப்பட்டபடியே எனக்குத் தெளிவாக போதித்தீர்கள். அதன் காரணமாக நான் உண்மையான கிறிஸ்தவனாக மாறினேன். இப்பொழுதும் என் இரட்சகராகிய இயேசுவை சந்திக்க நான் ஆயத்தமானேன். என்னை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவண்டை வழிநடத்தியதற்காக நான் மிகுந்த நன்றியுள்ளவனாயிருக்கிறேன்” என்று எழுதச்சொன்னான். அவனுடைய சபைபோதகரும் அப்படியே எழுதி தாமதமின்றி அனுப்பிவைத்தார். அக்கடிதத்திற்கு உடனடியான பதிலும் ஆசிரியையிடமிருந்து வந்தது.

அதில் “அன்புள்ள ஜேம்ஸ்க்கு நான் கடந்த மாதத்தில்தான் ஞாயிறுபள்ளி ஊழியத்தை விட்டு விட்டேன். ஆனால் உன்னுடைய கடிதம் என்னுடைய சோர்வை மாற்றினது. நான் உற்சாகப்படுத்தப்பட்டு தேவனிடத்தில் முறையிட்டு மீண்டும் இந்த ஞாயிறுபள்ளி ஊழியத்தைச் செய்ய தீர்மானித்துவிட்டேன். என்னை உற்சாகப்படுத்திய உன்னுடைய அன்பான கடிதத்திற்கு நன்றி சொல்கிறேன். கர்த்தர் உம்மை வழிநடத்துவாராக என்று எழுதியிருந்தார்கள். கடிதத்தை வாசித்த சபைபோதகர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடின, அந்த கடிதத்தை வாசிக்க ஜேம்ஸ் இல்லை. அவன் பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்துவிட்டான்.

ஞாயிறுபள்ளி ஊழியத்தின் மூலமாக தேவன் பெரிய காரியங்களைச் செய்கிறார். ஞாயிறுபள்ளி ஆசிரியர்களைக் கொண்டு பிள்ளைகளை மெய்யான கிறிஸ்தவர்களாக உருவாக்குகிறார். பிள்ளைகளைக் கொண்டு உற்சாகமிழந்த ஆசிரியர்களை உற்சாகப்படுத்துகிறார். ஆ... தேவனுடைய செய்கைகள் எவ்வளவு மகத்துவமானவைகள்!

**மனப்பாட வசனம்:**
**“ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது” - நீதிமொழிகள்24:10**

## வேத அறிவுப் போட்டி எண்: 277

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. ஞானியின் இருதயம் எதையும், எதையும் அறியும்?
2. உங்களை அழைக்கிறவர் எப்படிப்பட்டவர்?
3. வழுவிப்போகிற மனதை உடையவர்கள் புத்திமான்களாகி, முறுமுறுக்கிறவர்கள் எதைக்கற்றுக்கொள்ளுவார்கள்?
4. நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காக தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்கு கட்டளையிடு என எழுதும் அப்போஸ்தலன் யார்?
5. அவர் சத்தமிடுகையில் வானத்திலே என்ன உண்டாகிறது?
6. பரிசுத்த வேத எழுத்துக்களை நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
7. பஞ்சத்தின் கொடுமையினால் எங்கள் தோல் அடுப்பங்கரையைப் போல கறுத்துப்போயிற்று என புலம்பும் தீர்க்கதரிசி யார்?
8. குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும், துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே என்னவாக ஏற்படுத்தலாம்?
9. இதோ, தானியேலைப்பார்க்கிலும் நீ ஞானவான்; இரகசியமானதொன்றும் உனக்கு மறைபொருள் அல்ல என்று எந்த அதிபதியை நோக்கி சொல்லப்பட்டது?
10. நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் என்வாய் மாத்திரம் இருக்கிறபடியால்... என எழுதப்பட்டது?

## வேதாகம ஆய்வு... 51 சிப்போராள் – zipporah

1. எத்திரோ என்னும் மீதியானிய ஆசாரியனின் மகள்
2. மோசேயின் மனைவி – யாத்.2:21
3. கெர்சோம், எலியேசர் என்பவர்களுடைய தாய்
4. தன் மகனை விருத்தசேதனம் பண்ணினாள் – யாத்.4:25
5. இவளுக்கு உடன்பிந்த சகோதரிகள் இருந்தார்கள் – யாத்.2:20



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
September 2023



Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
**The Word of Christ,**
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

தேவன் மோசேக்கு
சீனாய் மலையில்
முட்செடியில் தரிசினமான
இடத்தில்
சகோதரி குளோரி



To

**Postman Remarks (If Undelivered):**

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



love God
love people
be a servant